1993 மார்ச் 17]

119—

பாலிடெக்னிக், பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் பிற்பட்ட மாணவர்களுக்கு சலுகைகள் அளித்தல்.

*10840—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்ட மாணவர்களுக்கு கல்லூரி பட்டப் படிப்பு களில் அனைத்து சலுகைகளும் அளிப்பதுபோல, பாலிடெக்னிக், விவசாயப் பொறியியல், பொறியியல் போன்ற பிற பட்டம் படிப்பவர்களுக்கும் அனைத்து சலுகைகளும் மற்றும் உணவு விடுதிகளிலும் சலுகைகள் அளிக்கக் கோரி அரசுக்கு முறையீடு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், கோரிக்கையினை பரிசீலித்து உரிய சலுகை வழங்க அரசு முன்வருமா ?

திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11-00

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைத்து, பிற்படுத்தப்பட்டோர் நலம் காப்பது டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு. தொழில் பயிற்சிக் கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கு கல்லூரி, பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் மாணவ மாணவியர்க்கு இடம் அளிக்கப்படுவதில்லை. ஏழை மாணவர்கள் தங்குவதற்குப் பயன்படும் வண்ணம் கல்லூரி விடுதிகளில் சேர்த்துக் கொள்ள அல்லது குறிப்பிட்ட சதவிகிதம் இடம் ஒதுக்க தமிழ கத்தின் பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.